DECEMBER 2022 **P/ID 35312/PTL1B**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. நாச்சியார் திருமொழி - குறிப்பு வரைக.

2. குலசேகரப்படி என்றால் என்ன?

3. ஆண்டாளின் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

4. கண்ணனின் வீரச் செயல்களாகக் குலசேகர ஆழ்வார் கூறுவன யாவை?

5. அரங்கனை நினைத்து குலசேகர ஆழ்வார் ஏக்கம் கொள்ளக் காரணம் என்ன?

6. மாணிக்கவாசகர் - குறிப்பு வரைக.

7. பிடித்த பத்து என்றால் என்ன?

8. தேவாரம் - பொருளுரைக்க.

9. ஞான சம்பந்தரின் உள்ளங்கவர் கள்வன் யார்?

10. அற்புதத் திருவந்தாதியின் சிறப்பினைக் குறிப்பிடுக.

11. சிவபெருமானின் ஆடற்கோலத்தின் அழகினை அற்புதத் திருவந்தாதி எவ்வாறு போற்றுகிறது?

12. காரைக்கால் அம்மையார் கண்ட அற்புதக் காட்சிகள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. ஆண்டாளின் கனவும் மனமும் குறித்து விளக்குக.

14. ஆண்டாள் கூடல் இழைத்தல் மூலம் கண்ணனிடம் தான் கொண்ட காதலை எவ்வாறு வெளிப்படுத்துகிறாள்?

15. குலசேகர ஆழ்வாரின் தாலாட்டுப் பாடல்களின் சிறப்பினை எடுத்துரைக்க.

16. குலசேகர ஆழ்வார் பாடல்களில் இடம்பெற்றுள்ள தொன்மக் கூறுகளை விவரி.

17. "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" எனத் தொடங்கும் பாடலின் சிறப்பினை எடுத்துரைக்க.

18. ஈசனின் அருட் செயல்களைத் திருஞான சம்பந்தர் வழி நின்று விளக்குக.

19. காரைக்கால் அம்மையாரின் உவமைத் திறத்தினை வெளிப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை எழுதுக.

20. நாச்சியார் திருமொழியில் இடம்பெற்றுள்ள புராணச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

21. குலசேகர ஆழ்வார் இராம அவதாரத்தின் மீது பெரிதும் ஈடுபாடு உடையவர் என்பதை நும் பாடப்பகுதி கொண்டு விளக்கி வரைக.

22. சிவனின் பெருமைகளை மாணிக்கவாசகர் வழி நின்று விளக்கி உரைக்க.

23. ஞானசம்பந்தரின் கவிச்சிறப்பை நும் பாடப்பகுதி கொண்டு விரித்துரைக்க.

24. இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட காரைக்கால் அம்மையாரின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துக.

———————